**செய்தி வெளியீடு எண்: 82** **நாள்: 31.01.2013**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 30.1.2013 அன்று தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் 6 கோடியே 48 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஈரோடு மாநகராட்சி புதிய அலுவலகக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், ஈரோடு மாநகராட்சியில் துப்புரவு பணியாளர்கள் குடியிருப்பு, தேனி மாவட்டம், கூடலூர் நகராட்சியில் துப்புரவு பணியாளர்கள் குடியிருப்பு, திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி நகராட்சியில் பேருந்து நிலையம், காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு நகராட்சி அலுவலகக் கட்டடம், விருதுநகர் மாவட்டம், சாத்தூர் நகராட்சியில் துப்புரவு பணியாளர்கள் குடியிருப்பு, என மொத்தம் 9 கோடியே 74 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்களை திறந்து வைத்தார்கள்.

பொது மக்கள் நலன் கருதியும், அலுவலர்கள் சிரமமின்றி பணியாற்றுவதற்கு ஏதுவாகவும், போதிய இடவசதி மற்றும் அடிப்படை வசதியின்றி இயங்கி வரும் மாநகராட்சி மற்றும் நகராட்சி அலுவலகங்கள் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய அலுவலகக் கட்டடங்களில் இயங்க வேண்டும் என்பதன் அடிப்படையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

ஈரோடு மாநகராட்சியில் 6 கோடியே 48 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடம், ஈரோடு ஜீவானந்தம் சாலையில் 76 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 12 அலகுகளைக் கொண்ட புதிய துப்புரவு பணியாளர்கள் குடியிருப்பு கட்டடம்; தேனி மாவட்டம், கூடலூர் நகராட்சியில் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய துப்புரவு பணியாளர்கள் குடியிருப்பு; திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி நகராட்சியில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையம்; காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு நகராட்சியில் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்

கட்டப்பட்டுள்ள புதிய அலுவலகக் கட்டடம்; விருதுநகர் மாவட்டம், சாத்தூர் நகராட்சியில் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய துப்புரவு பணியாளர்கள் குடியிருப்பு,

என மொத்தம் 9 கோடியே 74 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 30.1.2013 அன்று தலைமைச் செயலகத்தில் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் (பொறுப்பு), நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் : 31.1.2013